www.Padasalai.Net www.TrbTnpsc.com

S

# முதல் திருப்புதல் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி — தமிழ் — மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 14x1=14

1) கருத்து 1: இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய். பயனிலை என்று வருவதே மரபு

கருத்து 2: தொடரமைப்பு. சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

2) பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

3) கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) காலத்தினால் செய்த நன்றி ஈ) செய்யாமல் செய்த உதவி

4) குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட நூல்

அ) தொல்காப்பியம் ஆ) திருக்குறள் இ) அகநானூறு ஈ) குறுந்தொகை

5) பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) திருவல்லிக்கேணி ஆறு | - | 1) மாவலிச் செலவு |
| ஆ) பக்கிங்காம் கால்வாய் | - | 2) கல் கோடரி |
| இ) பல்லாவரம் | - | 3) அருங்காட்சியகம் |
| ஈ) எழும்பூர் | - | 4) கூவம் |

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1

6) சவடியோடு பொருந்தாத ஒற்றைத் தேர்வு செய்க

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

7) ஆர்ப்பரிக்கும் கடல்

அதன் அடித்தளம்

மௌனம்: மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது

அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்

இ) நிறைகுடம் நீர்த்தழும்பல் இல்

ஈ) புற அசைவுகள் அகத்திணை அசைக்க இயலாது

8) 'இலக்கியத்தில் மேலாண்மை' நூலின் ஆசிரியர் யார்?

அ) வெ. இறையன்பு ஆ) வீரசோழன் இ) பக்தவத்சல பாரதி ஈ) உ.வே. சாமிநாதர்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

9) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

10) 'ஓற்றைக் கோணக்கலை' (single dimension art) எனப்படுவது

அ) நாடகம் ஆ) நடனம் இ) திரைப்படம் ஈ) ஓவியம்

11) பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

12) உலகப் புலி நாள் ______

அ) ஏப்ரல் 22 ஆ) ஜனவரி 22 இ) மே 22 ஈ) ஜூன் 22

13) தோப்பில் முகமது மீரானின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது?

அ) சாய்வு நாற்காலி ஆ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்

இ) துறைமுகம் ஈ) கூனன் தோப்பு

14) 'Stamp pad' என்பதன் சரியான தமிழ்ச் சொல்

அ) கோப்பு ஆ) மை பொதி இ) அழிப்பான் ஈ) மடிப்புத்தாள்

பகுதி - II

பிரிவு - அ

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:- 3×2=6

15) நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

16) மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?

17) கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

18) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

பிரிவு - ஆ

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:- 2×2=4

19) 'கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக?

20) மணந்தகம் என்றால் என்ன?

21) காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்கு சான்று தருக.

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14

22) உவமைத் தொடரைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

அ) தாமரை இலை நீர்போல அல்லது ஆ) எலியும் பூனையும் போல

23) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

விலை விளை விழை

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



24) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்

25) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ

ஆ) ஏவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல.

26) புணர்ச்சி விதி தருக. உரனுடை அல்லது பெருந்தேர்

27) பகுபத உறுப்பிலக்கணம் தருக. இடிந்து அல்லது அமர்ந்தான்

28) பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க

அ) உழை - உலை அல்லது ஊண் - ஊன்

29) விடைக்கேற்ற வினா அமைக்க

சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாக பயணிக்கவும் உதவுகின்றன.

30) காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.

## பகுதி - III

### பிரிவு - அ

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

31) 'வருபவர் எவராயினும்

நன்றி செலுத்து' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

32) எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? குறள் வழி விளக்குக.

33) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

34) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

### பிரிவு - ஆ

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

35) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

36) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37) மையாடல் விழா - விளக்கி எழுதுக.

38) மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

### பிரிவு - இ

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×4=12

39) அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

ஆ) பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40) இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.)

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்த அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டி
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம் - நாமக்கல் கவிஞர்

41) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) யானைக்கும் அடி சறுக்கும் அல்லது குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

42) மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்
3. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன
4. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

43) தொன்மம் என்னும் உத்தியைப் பயன்படுத்திப் புதுக்கவிதை ஒன்றை எழுதுக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 3×6=18

44) அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க. (அல்லது)

ஆ) சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப்பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன.

45) அ) குடும்பம் என்னும் அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு விளக்கு. (அல்லது)

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46) அ) 'உரிமைத்தாகம்' - கதையைக் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி எழுதுக. (அல்லது)

ஆ) மகா நடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தினை நயத்துடன் எழுதுக.

47) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

அ) "குகனோடும்" ....... எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

ஆ) 'செயல்' என முடியும் குறளை எழுதுக.

*********

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com